மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவின் ஆட்சி நடைபெற்று வருவதால், கத்தரி வெயிலில்கூட எங்களது கோவை கொங்கு சீமையிலே மழை அதிகமாக பெய்து, இப்போது குளத்தில் நீர் அதிகமாக உள்ளது. நான் இந்தக் கேள்வியை முன்பே கேட்டிருந்தேன். இருந்தாலும், இன்று கேள்வி வந்ததனால் இந்தக் கேள்விக்கு எங்களுடைய அமைச்சர் நல்லதொரு பதிலைத் தந்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

93—

ஆட்டோ நகர்

***7142—திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோட்டில் ஆட்டோ நகர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்செங்கோட்டில் ஆட்டோ நகர் அமைக்கும் உச்தேசம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.

திருமதி பொன். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்று

2018 மே 31]

தவ வாழ்வு வாழ்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அனைவரையும் வணங்குகிறேன்.

திருச்செங்கோடு தொகுதியில் சாலை ஓரத்திலும் மற்ற இடங்களிலும் 500, 600 பட்டறைகளுக்குமேல் உள்ளன. போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதால், அந்த பட்டறைகளுக்கு இடம் ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டில் தற்சமயம் ஆட்டோ சிட்டி அமைக்க இயலாது. இருந்தாலும், திருச்செங்கோட்டிலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவில், ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் சுமார் 1,859 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் தொழில் வளர்ச்சி மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 1,727 ஏக்கர் நிலம் 243 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது 132 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய தயார் நிலையில் உள்ளது. மாண்புமிகு திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் விரும்பினால், ஆட்டோ உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழில் நிறுவனங்கள் ஏதேனும் தங்களது தொழிலை அந்தத் தொழில் வளர்ச்சி மையத்தில் தொடங்க முன்வந்தால், அவர்களுக்குத் தேவையான நிலம் உடனடியாக ஒதுக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்று தமிழக மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து*

மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு, இந்த ஆட்சி எப்போது கவிழும், நாம் எப்போது முதலமைச்சர் அரியணையில் அமருவோம் என்று கனவு கண்டவர்களின் எண்ணங்களையெல்லாம் கனவுகளாக்கி, அவர்களெல்லாம் இந்த அரசுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளையெல்லாம் முறியடித்து, அந்தக் கனவு கண்டவர்கள் தங்களது அலுவலகத்தில் ஒரு சபையை அமைத்து ஆளும் கட்சியாக அமர்ந்து ரசித்து மகிழும் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நல்லதொரு ஆட்சியைத் திறம்பட நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நமது சிறப்புமிக்க மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அவர்களுக்குத் துணையாக இருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10—25

எங்களது பெரம்பலூர் மாவட்டத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் துவங்கப்பட்டது. அந்தச் சர்க்கரை ஆலையில் ஆரம்பிக்கப்பட்ட அன்று நிறுவப்பட்ட அதே machineries தான் இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் அடிக்கடி பழுது ஏற்படுவதால், அந்தச் சர்க்கரை ஆலையை மூடவேண்டிய நிலை உருவாகி இருக்கிறது. எனவே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்ட அந்த ஆலையை நவீனப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்து, அந்த ஆலை புத்துயிர் பெற்று இயங்குவதற்கு அம்மா அவர்களுடைய ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட கேள்வியாக இல்லை. இருந்தாலும், அந்த ஆலையை modernization செய்வது தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, நிதித் துறையில் நிதி ஒதுக்கீடு

2018 மே 31]

கேட்கப்பட்டுள்ளது. நிதித் துறையிலிருந்து நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன், உடனடியாக அந்த ஆலையில் maintenance work செய்வதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலாடுதுறை தொகுதியில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை உள்ளது. இது புரட்சித் தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆலை. அந்த ஆலை இப்பொழுது மூடப்பட்டுள்ளது. அந்த ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 15 மாதங்களாக சம்பளம் தரப்படவில்லை. விவசாயிகளுக்கு தரப்பட வேண்டிய கரும்பிற்கான பணம், 8 கோடி ரூபாய் தரப்படவில்லை. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ், அந்தச் சர்க்கரை ஆலையை மேம்படுத்துவதற்காக 51 கோடி ரூபாயை அறிவித்தார்கள். அந்தத் தொகையும் இதுவரை விடுவிக்கப்படவில்லை. எனது தொகுதியில் நாகப்பட்டினம் மாவட்டத்திலே அந்த ஒரே ஒரு ஆலை மட்டும்தான் உள்ளது. எனவே, அந்தச் சர்க்கரை ஆலையைத் தொடர்ந்து இயக்குவதற்கு நமது அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் FRP–தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளது. கரும்பு விவசாயிகளுக்குண்டான நிலுவைத் தொகை FRP கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு நிதி ஒதுக்கீடு

செய்துள்ளது. மேலும், ஆலைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளத்தைக் கொடுப்பதற்கு வழிவகைக் கடன் அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. கடன் கிடைக்கப்பெற்றவுடன், சம்பள பாக்கி கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுத்தல்

***30246—திருமதி பெ. சீத்தாபதி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், பெருமுக்கல் பகுதியில் உள்ள கல்குவாரிகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு தெய்வத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி சம்பவத்தில் இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம், தாங்கள் விரித்த வலையிலே பெரிய முயல் மாட்டிவிட்டது; அதை ருசித்து உண்டுவிடலாம் என்று எண்ணி ஏமாந்துவிட்ட நிலையில் அவர்களைப் புறமுதுகு காட்டி ஓட வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றே நாட்களுக்குள் தமிழகத்தில் அமைதியை நிலைநாட்டி, இன்றைக்குத் தமிழகத்தை சிறப்பான முறையில் வழி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.